**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**முன்னிலை: திருமதி.R.D.குருலட்சுமி M.A.,M.L., PGDI & CL.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 11 -ம் நாள் வியாழக்கிழமை**
**திருவள்ளுவர் ஆண்டு, 2054, சோபகிருது வருடம், மார்கழி மாதம் 26 -ம் நாள்**
**நி.ம.எண்.2/21 இன் நி.ம.எண். 8/2019 இன் மு.வ.எண். 43/2008**

1. பர்வதவர்த்தினி (இறப்பு)
2. நடராஜன்
3. கனகராஜன்
4. பரணிராஜன்
5. மகுடபதிராஜன் ... மனுதாரர்கள்/வாதிகள்

... எதிர் ...

V.T.K.ராஜேந்திரன் ...எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இம்மனு என்முன்பு 12.12.2023 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது 1ம் மனுதாரர் இறந்த நிலையில் 2 முதல் 4 மனுதாராகள்/2 முதல் 4 வாதிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.சுப்பராயன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.வி.ரமேஷ், திரு.எம்.ராம்குமார் ஆகியோர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்டும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுவில் கண்ட விபரப்படி பிராதை திருத்தம் செய்து கொள்ள உத்திரவிட வேண்டி மனு தாக்கல்.

**1. மனு அபிடவிட்டின் சுருக்கம்:-**

அ) மனுதாரர்களின் தாயாரால் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது மானாமதுரை முதன்மை டி.மு.கோர்டில் மு.வ.எண்.43/2008 என்ற வழக்கு

பிராதுசொத்தை மனுதாரர்கள் சேர்ந்து கிரையம் பெற்றார்கள். பிராது 1ம் இலக்க சொத்தை 3ம் நபருக்கு ஏற்கனவே கிரையம் கொடுத்து விட்டார்கள். எனவே 1ம் இலக்க சொத்தையும் நீதிமன்ற பரிகாரத்தையும் நீக்கம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. நீதிமன்ற ஆணையர் 12.08.2023ம் தேதி தாவாசொத்தை பார்வையிட வந்த போது, அவருக்கு மனுதாரர்கள் தரப்பில் குறிப்பாணை கொடுக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் செய்துள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய இ.ம.எண்.510/2013 தாக்கல் செய்து நீதிமன்ற ஆணையர் 12.03.2023ம் தேதி பார்வையிட்டு 30.08.2023ம் தேதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா 2ம் இலக்க சொத்தான புலஎண்.16/10 மொத்தம் 8 செண்ட் ஆகும். அதில் மனுதாரர்கள் 6 1/2 சென்டை கிரையம் பெற்றுள்ளனர். வழக்கு நிலுவையில் இருக்கும் போது, மேற்படி சொத்தின் பெரும்பகுதியை ஆக்கிரமிப்பு செய்து பள்ளிக்கு தேவையான கட்டிடங்கள் கட்டியுள்ளனர்.

ஆ) மேற்படி சொத்தில் பிரதிவாதிகள் சுமார் 1943.1 சதுரடி நிலத்தை ஆக்கிரமிப்பு

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.01.11 16:46:31 +0530

செய்துள்ளார்கள். தாவா 2ம் இலக்கத்தில் கிழமேல் 2 1/2 அடி தென்வடல் 45 அடியை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தததைக் குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது மொத்தம் 1943.1 சதுரடி நிலத்தினை எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளார்கள். இம்மனுவை அனுமதிப்பதால் வழக்குமூலம், வழக்கின் தன்மை மாறாது. எனவே மனுவை அனுமதிக்க வேண்டும்.

**2. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:-**

மனு ஆட்சேபிக்கப்படுகிறது. மனுவில் கூறியுள்ள விசயங்கள் ஆட்சேபிக்கப்படுகிறது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள வரைபடம் பொய்யாக இவ்வழக்கின் தோதிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட இரண்டு ஆணையர்கள் தாக்கல் செய்துள்ள வரைபடங்களையும் இதனுடன் வாசித்து கொள்ள வேண்டும். மனுதாரர் கோரும் சீர்திருத்தம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. இம்மனு வழக்கின் அடிப்படை கட்டமைப்பை மாற்றக் கூடியதாக உள்ளது. அசல்வழக்கு 2019ம் ஆண்டிலிருந்து நிலுவையிலிருந்து வரும் நிலையில் ஆணையர் வெகுகாலத்திற்கு முன்பே அறிக்கை வரைபடம் தாக்கல் செய்துள்ள நிலையில், காலம் கடத்தி வேண்டுமென்றே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல்வழக்கு விசாரணைக்காக உள்ள நிலையில் பொய்யான விவரங்கள் கண்டு மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**3.** இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா? இல்லையா? என்பதே ஆகும்.

**4.** இரு தரப்பு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. பிராது 1ம் இலக்க சொத்தை 3ம் நபருக்கு ஏற்கனவே கிரையம் கொடுத்து விட்டார்கள் என்றும், எனவே 1ம் இலக்க சொத்தையும் நீதிமன்ற பரிகாரத்தையும் நீக்கம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், தாவா 2ம் இலக்கத்தில் கிழமேல் 2 1/2 அடி தென்வடல் 45 அடியை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தததைக் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது மொத்தம் 1943.1 சதுரடி நிலத்தினை எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளார்கள் என்றும், எனவே அதை குறித்து வழக்கை சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்றும், மனுவை அனுமதிக்கக் கோரி மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டது.

**5.** அசல்வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாவாசொத்தை பார்வையிட்டு 12.08.2010ம் தேதியிட்டு அறிக்கை வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றும் சுமார் 13 ஆண்டுகள் காலதாமதமாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், அசல் வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டியே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுவை தள்ளுபடி செய்யக் கோரி வாதிடப்பட்டது.

**6.** அசல்வழக்கானது 18.11.2002ம் தேதியிட்டு விளம்புகை மற்றும் நிரந்தரஉறுத்துக்கட்டளை, செயலுறுத்துக்கட்டளை, சுவாதீனப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல்வழக்கில் ஆணையர் நியமனம் கோரி மனுதாக்கல் செய்து, அசல்வழக்கு விசாரணைக்காக 07.10.2003ம் தேதியிட்டு பட்டியலில் இடப்பட்டு. இ.ம.எண்.683/2003 மனு உத்தரவின் பேரில் விசாரணை பட்டியலிலிருந்து நீக்கரவு செய்யப்பட்டு,

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2024.01.11 16:47:19 +0530

பின்னிட்டு இ.ம.எண்.756/2003 மனுவானது ஆணையர் நியமனம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு 30.01.2004ம் தேதியிட்டு அனுமதியாகி உள்ளது. நீதிமன்ற ஆணையர் தாவாசொத்தை பார்வையிட்டு 04.09.2006ம் தேதியிட்டு அறிக்கை வரைபடம் தாக்கல் செய்துள்ளார். பின்னிட்டு அசல்வழக்கு விசாரணைக்காக நிலுவையில் இருந்த நிலையில் இ.ம.எண்.395/2007 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அம்மனுவின் உத்தரவின் பேரில் நீதிமன்ற ஆணையர் தாவாசொத்தை 13.02.2010 ம் தேதி பார்வையிட்டு, 12.08.2010ம் தேதியிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார்.

**7.** அதன்பின்னிட்டு மனுதாரர் தரப்பில் பிராதை சீர்திருத்தம் செய்ய இ.ம.எண்.803/2010 தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு கடந்த 09.08.2011ம் தேதியிட்டு, தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு மனுதாரர்கள் தரப்பில் 696/2011 தாக்கல் செய்து, அம்மனுவும் 07.11.2012ம் தேதியிட்டு தள்ளுபடியாகியுள்ளது. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் சி.ஆர்.பி (பி.ஓ.)(எம்.டி) எண்.216/2012ன் 27.02.2012 ம் தேதியிட்ட தீர்ப்பின் பேரில் பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்து வந்த நிலையில் மனுதாரர்கள் தரப்பில் முந்தைய ஆணையர் அறிக்கையை ரத்து செய்து, புது ஆணையர் அறிக்கை வரைபடம் தாக்கல் செய்யக் கோரி இ.ம.எண்.510/2013 தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8.** இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாவாசொத்தை பார்வையிட்டு 30.08.2021ம் தேதியிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். மேலே கண்ட விசயங்களிலிருந்து மனுதாரர் அசல்வழக்கு விசாரணையை வேண்டுமென்றே சுமார் 21 வருடங்களாக மேல் நடத்த விடாமல் மனுக்கள் தாக்கல் செய்து வழக்கை இழுத்தடிப்பதையே வழக்கமாக வைத்துள்ளார் என்பது தெரியவருகிறது. நீதிமன்ற ஆணையர் 12.08.2010ம் தேதியிட்டு தாக்கல் செய்துள்ள அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடித்திலேயே 2ம் இலக்க சொத்து கட்டிடம் என்று காட்டப்பட்டுள்ளதாகவும், அதன்பின்பும் சுமார் 13 ஆண்டுகள் மனுதாரர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து விட்டு, தற்போது வழக்கு விசாரணைப் பட்டியலில் இடப்பட்ட பின்பு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

**9.** வழக்கின் விசாரணைக்கு முன்பு எந்த காலகட்டத்திலும் பிராதை சீர்திருத்தம் செய்ய மனுதாரருக்கு உரிமை உண்டு என்றும், இவ்வழக்கில் இதுவரை சாட்சி விசாரணை செய்யப்படாத நிலையில், மனுவை அனுமதிக்க உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டது. மாண்பமை உச்சநீதிமன்ற 2008 (6) சிடிசி பக்கம் 237 அனந்தலு சுதாகர் எதிர் பூச்சி ரெட்டி(இறப்பு) மற்றும் சிலர் வழக்கில் கூறியுள்ள வழிகாட்டுதலின் அடிப்படையிலும், இவ்வழக்கின் சூழ்நிலைகளிலும் இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும் அசல்வழக்கு தாக்கல் செய்து சுமார் 21 ஆண்டுகள் கழித்து இம்மனு காலதாமதமாக தாக்கல் செய்து எதிர்மனுதாரர்களுக்கு அலைக்கழிவு செய்ததற்கு, எதிர்மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு வரும் 19.11.2023 ம் தேதி அன்றோ அல்லது அதற்கு முன்போ செலவுத்தொகையாக ரூ.5000/- கொடுக்கும் பட்சத்தில் மனு

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.01.11 16:47:34 +0530

அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தானாக தள்ளுபடி ஆகும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 19.11.2023

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2023-ம் ஆண்டு டிசம்பர் 11 -ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2024.01.11 16:47:47 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், திருப்புவனம்.**

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- **இல்லை.**

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- **இல்லை.**

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2024.01.11 16:47:58 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், திருப்புவனம்.**